செ.வெ.எண்:28 நாள்:16.04.2019

**கரூர் மாவட்டம்**

**வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் 11 வகையான புகைப்பட ஆவணங்களில் ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம் - தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

23-கரூர் பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்கள் அனைவரும் 18.04.2019ம் தேதி நடைபெற இருக்கும் இந்திய பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் வாக்களிக்க, இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட புகைப்பட வாக்காளர் அடையாள அட்டையை பயன்படுத்தி, அதனை வாக்கு சாவடி அலுவலரிடம் காண்பித்து தாங்கள் வாக்களிக்கலாம்.

அவ்வாறு புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை காண்பிக்க இயலாதவர்கள், இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்கண்ட 11 மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஒன்றை பயன்படுத்தி அதனை வாக்குச் சாவடி அலுவலரிடம் காண்பித்து வாக்களிக்கலாம்.

ஆனால் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் சீட்டு (Voter slip), வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான அடையாள ஆவணமாக ஏற்கப்படமாட்டாது.

1.கடவுச் சீட்டு, 2.ஓட்டுனர் உரிமம், 3. மத்திய,மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், 4. வாக்காளர் புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது அஞ்சலக, 5.நிரந்தர கணக்கு எண் அட்டை, 6. தேசிய மக்கள்தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, 7. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை, 8. தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை, 9.புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், 10.பாராளுமன்ற, சட்டமன்ற, சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அலுவலக அடையாள அட்டை, 11.ஆதார் அட்டை ஆகிய 11 வகையான புகைப்படத்துடன் கூடிய ஆவணங்களைக்காட்டி வாக்களிக்கலாம்.

(1.Passport, 2.Driving License, 3.Service Identity Cards with Photograph issued to employees by Central/ State Government PSU's/Public Limited Companies, 4.Pass books with Photograph issued by Bank/ Post Office, 5.PAN Card, 6.Smart Card issued by RGI under NPR, 7.MNREGA Job card, 8.Health Insurance Smart Card issued under the Scheme of Ministry of Labour, 9.Pension document with Photograph, 10.Official identity cards issued to MPs/ MLAs/ MLCs, 11.Aadhaar Card)

இவ்வாறு தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்